# வீதி கோடுகள் - கட்டிட எல்லைக்கான சான்றிதழ் வழங்குதல்

ஒரு காணி அமைந்துள்ள உள்ளூராட்சி மன்றத்தில் அதிகாரமுடைய அதிகாரியால் நில அளவையாளர் வரைப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைக்கோடு வீதி எல்லைக்கோடாகும். இந்த வீதி கோட்டிலிருந்து நிலத்தின் எல்லையாக காணப்படும் வீதிவரையான பகுதி பிற்காலத்தில் வீதியை விஸ்தரிப்பதற்காக பெற்றுக்கொள்ள வாய்ப்பு இருப்பதால் அந்த எல்லைக்குள் கட்டிடங்கள் நிர்மாணித்தல் முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது.

பிரதேச சபைக்கு சொந்தமான வீதியின் மத்திய இடத்தில் இருந்து இரு பக்கமும் 25 அடிகள் ( மீற்றர் 7.62) அப்பாலான பகுதி கட்டிட நிர்மான எல்லையாகும். வீதி அதிகார சபைக்கு சொந்தமான வீதியில் அல்லது அந்த பிரதேச வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான வீதியில் கட்டிட எல்லை அந்த நிறுவாகத்தால் வர்த்தமாணி அறிக்கையில் வெளியிடப்படும் அளவாகும்.

குறிப்பிட்ட கட்டிட அல்லது வீதிக்கோட்டு எல்லைக்குள் எந்த ஒரு நிர்மாணித்தலும் மேற்கொள்ள முடியாது.

வீதிக்கோடு அல்லது கட்டிட எல்லை சான்றிதழை பெற்றுக்கொள்வது எவ்வாறு?

**01**

முதலில் விண்ணப்பபடிவம் ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்.

அதை உள்ளூராட்சி மன்றத்தின் கரும பீடத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

அதேபோல உள்ளூராட்சி மன்றத்தின் இணையத்தளமூடாகவும் பெற்றுக் கொள்ள முடியும்.

**02**

இந்த விண்ணப்பத்தை தெளிவாகவும் சரியாகவும் பூர்த்தி செய்து நில அளவையாளரால் வழங்கப்பட்ட திட்டத்தின் பிரதி ஒன்றோடு ஒப்படையுங்கள்.

**03**

அதை ஒப்படைத்த சந்தர்ப்பத்திலேயே காணியின் எல்லைக்குள் இருக்கும் வீதிகள் தொடர்பாக விண்ணப்பதாரியிடம் கேட்டு அறிந்து கொள்வதோடு, தெளிவற்ற சந்தர்ப்பத்தில் தொழில்நுட்ப அதிகாரியின் உதவி பெற்றுக் கொள்ளப்படும்.

**04**

குறிப்பிட்ட சொத்து தொடர்பாக மன்றத்துக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் இருந்தால் அதையும் சான்றிதழை வழங்கும் கட்டணத்தையும், அந்த நேரத்திலே செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளுங்கள்.

**05**

வீதி எல்லையை குறிப்பிடப்பட்டுள்ள தருணத்தில் விண்ணப்பத்தை பெற்றுக்கொண்டு மூன்று நாட்களுக்குள் சான்றிதழை வழங்குவதோடு, வீதி எல்லையை குறிப்பிடாத தருணத்தில் விண்ணப்பத்தை பெற்றுக்கொண்ட தினத்திலேயே சான்றிதழ் வழங்கப்படும்.

**06**


விண்ணப்பதாரி அந்த சொத்தின் உரிமையாளர் அல்லாத தருணத்தில் சான்றிதழை வெளியிடுவதற்காக இணைபு 02 விண்ணப்பத்தில் ஏழாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உடன்பாட்டை தெரிவித்திருப்பது கட்டாயமாகும்.

**07**

சபையினால் வீதி எல்லையை குறித்திருந்தால் சபையின் தொழினுட்ப அதிகாரியால் காணி வகைப்படத்தில் வீதிரேகையை குறியிட்டு உங்களிடம் ஒப்படைப்பார். இணைப்பு ஒன்றில் கட்டிட எல்லையை குறிப்பிடப்படும்.

**08**

சபையினால் வீதி எல்லையை குறிப்பிடாத சந்தரப்பத்தில் இணைப்பு ஒன்றில் கட்டிட எல்லையை குறியிட்டு அதை வழங்குவார்கள்.



Funded by European Union
UNDP
STRIDE
CDLG Capacity Development of Local Governments